தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 19, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 செப்டம்பர் 4, சனிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

பொறாமை, பேராசை, பொங்கும் கோபம், புண்படுத்தும் சொல் ஆகிய இந்த நான்கும் அறவழிக்குப் பொருந்தாதவைகளாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. விதி 110–ன்கீழ் அறிக்கை

பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) இரத்து செய்யப்படுவது குறித்த கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் நலனுக்காக பல்வேறு அறிவிப்புகளையும், நலத் திட்டங்களையும் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாக, இப்போது நெசவுத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 4

நெசவாளத் தோழர்கள் மற்றும் சிறு, குறு தொழில் நிறுவனங்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, ஓர் முக்கிய அறிவிப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, 110 விதியின்கீழ் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்திய துணித் தொழில் வணிகத்தில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாடு துணித் தொழில் வகிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளின் எண்ணிக்கை 1,570 ஆகும். இவ்வாலைகள்மூலம் நூற்கப்படும் நூல், நாட்டின் மொத்த நூற்புத்திறனில் 45 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவில் 95 விழுக்காடு பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பொருட்கள் விற்பனை (ஒழுங்குமுறை) சட்டம் 1987, பிரிவு 24-ன்படி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சின் விற்பனை மதிப்பு மீது சந்தை நுழைவு வரியாக 1 விழுக்காடு விதிக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தின்படி, பருத்தி பொதி, பஞ்சு, கழிவுப் பஞ்சு ஆகியவை வேளாண் பொருட்களாகக் கருதப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள சந்தைப் பகுதிகளில் கொள்முதல் அல்லது விற்பனை செய்யப்படும்பொழுது 1 விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) விதிக்கப்படுகிறது. சந்தை நுழைவு வரி என்பது, பருத்திப் பொதிகள்மீது மட்டுமே விதிக்கப்பட வேண்டும். மாறாக, பஞ்சு, கழிவுப் பஞ்சு போன்ற உற்பத்திப் பொருட்கள்மீதும் 1 விழுக்காடு சந்தை நுழைவு வரி விதிக்கப்படுகிறது.

இதனால் வெளி மாநிலங்களிலிருந்து பஞ்சு கொள்முதல் செய்யப்படும்பொழுது சிறு, குறு நூற்பாலைகள் போக்குவரத்துக் கட்டணம் செலுத்துவதிலே பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பஞ்சின்மீது விதிக்கப்படும் சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டுமென்பது தொழில்முனைவோர் மற்றும் நெசவாளர்களின் நெடுநாள் கோரிக்கையாக இருக்கிறது. இதனால், மாநிலத்தில் இந்தியப் பருத்திக் கழகம் பஞ்சு நூல் விற்பனையை மேற்கொள்ளும்பொழுது, நூற்பாலைகள் பெரிய அளவிலான பஞ்சு இருப்பினைப் பராமரிக்க வேண்டியதில்லை.

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நெசவாளர்களுடன் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டங்களில், இந்த வரியினை நீக்க வேண்டுமென்று தங்களது கோரிக்கையாக அவர்கள் தெரிவித்தனர். இதனைக் கருத்திற்கொண்டு, தொழில்முனைவோர் மற்றும்

நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) இரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான உரிய சட்டத் திருத்தம் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவரப்படவிருக்கிறது என்பதைக் கூறி, அமைகிறேன்.

2. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சுருக்கமாக நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவிகித சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, நலிந்து, பட்டினிச்சாவுகளுக்கும், கஞ்சித்தொட்டிகளுக்கும் ஆளாகி வந்த நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை விதி 110-ன்கீழ் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழக அரசினுடைய நிதிநிலை மிக மோசமான ஒரு சூழலில் இருந்தாலும், நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு சிறு தொழிலாளர் வர்க்கத்தின் வேண்டுகோளை ஏற்று, இந்த வரி விதிப்பை நீக்கம் செய்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்காலமாக நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் விலை அதிகமாக விற்கின்ற பஞ்சினால், அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, அவர்களுக்கான ஒரு விடிவுகாலத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இது நெசவுத் தொழிலாளர்களுக்கு 100 சதவிகிதம் உதவியாக இருக்கும்.*